## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.99/2023**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 23.02.2026.**

| Name : சீனிவாசன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் போக்குவரத்து காவல் நெடுஞ்சாலைத்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 17.09.2022–ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த குணசீலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.454/2022 u/Sec. 147, 294(பி), 323, 324, 341, 506(1) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) குற்ற எண்.455/2022 என்ற வழக்கில் நான் தான் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரு வழக்குகளிலும் நான் காவல் துறையில் இருந்த போது தகவல் கிடைத்தது என்றால் ஆமாம். குற்ற எண்.454/2022 என்ற வழக்கில் புகார் தாரர் எந்த மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் என்றால் ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்தார்.

3) புகார்தாரரிடம் நான் புகார்வாக்குமூலம் பெறுவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 1/2 மணி நேரம் ஆனது. மேச்சேரி காவல் நிலையத்திலிருந்து ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1/2 மணி நேரம் ஆகும். சென்று வர 1 மணி நேரமாகும் என்றால் சரிதான். வாக்குமூலம் பதிவு செய்ய 1/2 மணி நேரம் ஆக மொத்தம் 1 1/2 மணி நேரம் என்றால் சரிதான்.

4) குற்ற எண்.455/2022 என்ற வழக்கில் என் முதல் தகவல் அறிக்கையில் 06.30 மணிக்கு தகவல் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற எண்.454/2022 வழக்கில் புகார் வாக்குமூலம் பதிவு செய்ய 1 1/2 மணி நேரம் ஆனதாக சொல்லப்படும் நிலையில் 6.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்த போது தகவல் கிடைத்ததாக சொல்வது ஏற்கும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

5) காவல் ஆய்வாளர் வசம் என்று முதல் தகவல் அறிக்கையை ஒப்படைத்தேன் என்றால் அனறையதினமே கொடுத்தேன். இவ்வழக்கின் புகார்தாரர்கள் எதிரிகளை அடித்துவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கின் எதிரிகள் மீது தவறுதலாக ஒரு புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் அதனை நான் சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**